## மொழித் திறன்களைக் கற்பித்தல்

தொடக்கப்பள்ளியை முடித்துச் செல்லும்போது, மாணவர் மொழியின் அடிப்படைத் திறன்கள் நான்கிலும் தேர்ச்சி பெற்று விளங்க வேண்டும். நம் பாடத்திட்டத்தில் இக்கருத்து அமைந்துள்ளது. அவை:

1. கேட்டல் ( கேட்குந்திறன் - listening skill )
2. பேசுதல் ( பேசுந்திறன் - speaking skill )
3. படித்தல் ( படிக்குந்திறன் - reading skill )
4. எழுதுதல் ( எழுதுந்திறன் - writing skill )

இவை தொடக்கப்பள்ளியோடு முடிவடைவதில்லை. அடுத்துவரும் கல்வி நிலைகளிலும் கற்பிக்கப்படுகின்றன. வகுப்பு நிலை உயர உயர இத்திறன்களின் செறிவும், நுட்பமும் வளர்நிலையில் அமைகிறது.

### கேட்கும் திறன் (Listening skill)

ஒவ்வொரு குழந்தையும் அதற்கு முற்றிலும் அறிமுகமில்லாத மொழி உலகில் பிறக்கிறது. பின்னர் வளர வளர தொடர்புகளின் காரணமாக மொழி உலகை அறிகிறது. இன்று எழுத்துமொழி இல்லாத இனங்கள் இருந்தாலும், பேச்சுமொழி இல்லாத மனித இனமே இல்லை. ஆகவே அதனதன் சூழலில் மொழியுலகை அறியும் கட்டாயம் ஏற்படுகிறது. மொழியுலகை அறிவது பிறர் பேசுவதைக் கேட்பது மூலமேதான். குழந்தைகள் வளரும் நிலையில், பெரியவர்கள் உலகில் தொடர்புக் கருவியாக இருக்கும். செல்வாக்குமிக்க மொழியைக் கேட்டல் மூலமே அடைய வேண்டியிருக்கிறது.

### கேட்டலின் வகைகள்

கேட்கும் திறனில், பிறர் பேசுவதைச் சிரமமின்றித் தெளிவாகக் கேட்டலும், பொருள் புரிதலும், பின்பற்றலும் உள்ளடங்கும். கேட்கும் திறனைப் பயிற்சியால் அடைய முடியும். கேட்குந்திறனைப் பயிற்சியால் அடைய முடியும். கேட்கும் திறன்வழி ஒலியமைப்பு, ஒத்தஒலி, ஒலிநுட்பம் பெறமுடியும்.

கேட்டலை வெறும் கேட்டல், உற்றுக்கேட்டல், செவிமடுத்தல் என மூவகைப் படுத்தலாம். வெறும் புலனுணர்வால் அமையும் கேட்டல் என்பது மிக எளிய நிலை. ஒலியானது செவிப்படும் சாதாரண நிலையிது. இதனினும் சற்று உயர்ந்த நிலை உற்றுக் கேட்டலாகும். இந்நிலையில் அவ்வொலியலை விழிப்புணர்வை ஏற்படுத்ததும். செவிசார்ந்த மொழியானது மூளையில் பதிவாகிறது. பொருள் புரிதல் என்ற கருத்து இங்கில்லை. இதனினும் உயர்ந்த நிலையே செவிமடுத்தல் எனப்படும். செவியால் பெறப்படும் ஒலியானது மொழிப்பொருள் கொள்ளப்படுதலும், தன்வயமாதலும் இந்நிலையினதாகும். இவ்வகைப் பாகுபாட்டில் கேட்குந்திறன் செவிமடுத்தலாக நிறைவு பெறும்.

கற்றலுக்கும் சிந்தித்தலுக்கும் கேட்கும் திறன் வேண்டும். அப்பொழுதுதான் கேட்கும் திறன் வழிக் கற்றவற்றைத் தொடர்புபடுத்த முடியும். இத்திறனை முழுமையாக அமைந்த திறன் எனலாம். ஒலித்தலைக் கேட்டல்வழி, சொல்லாகவும், பொருளாகவும், தொடிராகவும், அமைப்பாகவும் புரிந்துகொள்ளும் முழுநிலை இங்கு ஏற்படுகிறது.

## கேட்கும் திறனை வளர்த்தல்

கேட்கும் திறனை வளர்ப்பதற்குத் “தொடர்ந்து கேட்டல்“ வாய்ப்புகள் வேண்டும். கேட்கப்படுபவை தொடர்புடைய பகுதிகளாக இருத்தல் சிறப்பு. தனித்த உதிரிப்பேச்சுகள் கேட்டலுக்கு ஆர்வத்தை உண்டாக்காது. இவை கதையாக, நிகழ்ச்சிளாக, பாடல்களாக இருந்தால் தொடர்ந்து கேட்டல் சிறக்குமு;. கேடகும் திறனும் நிலை பெறும்.

கேட்கும் திறனை வளர்ப்பதால் மூளையில் பதிவுகள் ஏற்படுகின்றன. இதனால் மொழியின் ஒலிக்குறியீடுகள், நினைவு கூறல், வேறுபாடு அறிதல், சொற்களஞ்சியப் பெருக்கம், தொடரமைப்புகள் பதிவாதல், பொருள் புரியும் வேகம் மிகுதியாதல் போன்றவை நிகழும்.

கேட்கும் திறனை வளரப்பதில் ஆசிரியருக்கு நேரடியான பங்கு உண்டு. அதற்கான நேரடி வாய்ப்புகளை ஏற்படுத்தித் தரலாம்.

பாடங்கள் கேட்டல், கதைகள் கேட்டல், நிகழ்ச்சிகள் கேட்டல் என்பன தொடக்கநிலை மாணவர்களுக்கு ஏற்றவை. உரையாடல் கேட்டல், இலக்கிய மன்றங்களில் சொற்பொழிவு, சொற்போர் போன்றவை கேட்டலும், கற்றல் தொடர்பான ஒலிப்பதிவுகளைக் கேட்டலுமாகியவை உயர்நிலை மாணவர்களுக்கு ஏற்றவை.

கேட்கும் திறனை வளர்ப்பதற்குத் தொடக்கநிலை வகுப்பகளுக்கு ஒலியறிதல் விளையாட்டு, செய்திகளை மீண்டும் கூறுதல் விளையாட்டு, கட்டளையைக் கூறுதல் விளையாட்டு போன்றவை குறிப்பிடப்பட்டுள்ளன. முதல் வகுப்புக்குச் சிறப்பாக அமைந்த பயிற்சிகள் - பெயர்களைக் கேட்டுப் படங்களைக் காட்டும் பயிற்சி' ஒலிவடிவம் கேட்டு வரிவடிவம் காட்டும் பயிற்சி.

கேட்குந்திறன் மொழியின் பிறதிறன்களோடு தொடர்புடையது. கேட்குந்திறன் சிறக்கின் வாசிக்கும் திறன் சிறக்கும். கேட்கும் திறன் சிறக்கின் எழுதும் திறன் சிறக்கும். மாணவரின் படைப்பாற்றல் சிறக்கும்.